# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ  அதிவிசேஷமானது

අංක 2264/59 – 2022 ජනවාරි මස 27 වැනි බ්‍රහස්පතින්දා – 2022.01.27

*2264/59 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு  பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

***2022 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்கக் கட்டளை***

*எனது குறிப்பு இல :4-3/13/2020/PC/279.*
*பிரதேச செயலாளர் இல. : DS/NAI/LA/MOH/2014/02.*

*காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத் தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.*

எஸ்.எம். சந்திரசேன,
*காணி அமைச்சர்.*

*காணி அமைச்சு,*
*“மிஹிகத மெதுர”,*
*இல.1200/6, ரஜமல்வத்தை வீதி,*
*பத்தரமுல்லை,*
*2022, சனவரி 15.*

**அட்டவணை**

*1.* **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: *பிரதேச செயலாளர், நல்லூர்.*

*2.* **காணியின் விபரம்** : *வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில், கோண்டாவில் மேற்கு (J/120) கிராம அலுவலர் பிரிவில், கோண்டாவில் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2021.09.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபட இலக்கம் Ya/NLL/2021/041 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :*

*01.* **துண்டு ‘A’ - வீமன் - விஸ்தீரணம் : *0.1003* ஹெக்டயார்**

*வடக்கு: அடிபாதை மற்றும் வீதி (பிரதேச சபை); கிழக்கு: வீதி (பிரதேச சபை) மற்றும் சரவணமுத்து குகோதாசன் மற்றும் மனைவியான கலயிவனி உரிமை கோரும் வீமன்; தெற்கு : சரவணமுத்து குகோதாசன் மற்றும் மனைவியான கலயிவனி உரிமை கோரும் விமன் மற்றும் ஆ.வ. 8257 துண்டு இல. 01 ; மேற்கு: ஆ.வ. 8257 துண்டு இல. 01, தர்மலிங்கம் புஷ்பராணி உரிமை கோரும் பெயர் அறியாத காணி மற்றும் அடிபாதை.*

EOG 01-0304

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2022 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல :4-3/13/2020/PC/294.
பிரதேச செயலாளர் இல. : VSW/ DS/LB/ ACQ/MOH/SAND.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம், காணி அமைச்சர் சமரகோன் முதியன்சேலாகே சந்திரசேன ஆகிய நான், கீழ் விபரிக்கப்பட்ட அட்டவணையின் 1ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட காணி எடுத்தல் உத்தியோகத் தருக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அட்டவணையின் நேரொத்த 2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட காணியின் உடைமையை பொறுப்பேற்பதற்கு இத்தால் கட்டளையிடுகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
இல.1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, சனவரி 15.

**அட்டவணை**

1. **காணி எடுத்தல் உத்தியோகத்தர்**: பிரதேச செயலாளர், வலிகாமம், தென்மேற்கு சண்டிலிப்பாய்.

2. **காணியின் விபரம்** : வடக்கு மாகாணத்தில், யாழ்ப்பாணம் மாவட்டத்தில், வலிகாமம், தென்மேற்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலாளர் பிரிவில், சண்டிலிப்பாய் மத்திய (J/142) கிராம அலுவலர் பிரிவில், சண்டிலிப்பாய் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2021.07.30 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட முதற் சுவட்டு வரைபட இலக்கம் Ya/SND/2021/092 இல் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு 'A' - கொதானெய் தெலிதான் மற்றும் வண்ணாந்தரை வளவு - விஸ்தீரணம் : சுமார் 0.1032 ஹெக்டயார்**

வடக்கு: பாலசுப்பிரமணியம் குகதாசன் உரிமை கோரும் வண்ணாந்தரை வளவு, மிசாய் தோட்டம் மற்றும் கொட்டுகிணறு மற்றும் வீதி(பிரதேச சபை); கிழக்கு : சரவணபவன் சித்திராஞ்சன் உரிமை கோரும் கொதானெய் தெளித்தான் மற்றும் வண்ணந்தரை வளவு; தெற்கு : சரவணபவன் சித்திராஞ்சன் உரிமை கோரும் கொதானெய் தெளித்தான் மற்றும் வண்ணந்தரை வளவு, பாலசுப்பிரமணியம் குகதாசன் உரிமை கோரும் வண்ணாந்தரை வளவு, மிசாய் தோட்டம் மற்றும் கொட்டுகிணறு ; மேற்கு: பாலசுப்பிரமணியம் குகதாசன் உரிமை கோரும் வண்ணாந்தரை வளவு, மிசாய் தோட்டம் மற்றும் கொட்டுகிணறு மற்றும் வீதி (பிரதேச சபை).

EOG 01-0305

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

*38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ)வின் கீழான கட்டளை*

**2021 ஆம் ஆண்டின் 229 ஆம் இலக்கக் கட்டளை**

எனது குறிப்பு இல. : 4-3/ 4/2020/LRB/180.
கா. எ. உ. குறிப்பு இல. : KSWD&EIP/ACQ/DWC/07.

2021.11.10 ஆந் திகதிய 2253/19 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் சிங்களம் மற்றும் ஆங்கில மொழியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 229 ஆம் இலக்க கட்டளையில் 2A பக்கத்தில் 1 ஆம் அட்டவணையில் காணி எடுத்தல் உத்தியோகத்தர் "வேரஸ்கங்க அபிவிருத்தி திட்டம்" பதிலாக "கொலன்னாவ அபிவிருத்தி திட்டம்" என 2A பக்கத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட 2021 ஆம் ஆண்டின் 229 ஆம் இலக்க கட்டளையில் II அட்டவணையில் துண்டு விபரத்தின் கீழ் இல. 02 "துண்டு எழுத்து B விஸ்தீரணம் : 0.0353 ஹெக்டயார்" பதிலாக துண்டு எழுத்து B காணியின் பெயர் - குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம் : 0.0353 ஹெக்டயார்" மற்றும் இல. 03 "துண்டு எழுத்து C விஸ்தீரணம் : 0.1256 ஹெக்டயார்" என்பதற்கு பதிலாக "துண்டு எழுத்து C - காணியின் பெயர் - கண்டுபிடிக்க முடியவில்லை - விஸ்தீரணம் : 0.1256 ஹெக்டயார்" எனவும் திருத்தப்படுகின்ற என்பதை இத்தால் அறியத் தருகின்றேன்.

எஸ்.எம். சந்திரசேன,
காணி அமைச்சர்.

காணி அமைச்சு,
"மிஹிகத மெதுர",
காணிச் செயலகம்,
இல.1200/6, ராஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2022, சனவரி 15.

EOG 01-0306